தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்ப கல்லூரியில் புதிய ரக நெல் சாகுபடி

**பெரியகுளம்,**

பெரியகுளம் அருகே குள்ளப்புரத்தில் உள்ள வேளாண் தொழில்நுட்பக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியர், கோ-51 என்ற புதிய ரக நெல்லை பயிரிட்டு அறுவடை செய்தனர்.

110 நாளில் விளையக்கூடிய இந்த கோ-51 என்ற புதிய ரக நெல், கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்புதிய நெல் ரகத்தை குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் 3ஆம் ஆண்டு மாணவ, மாணவியர் பாடத்திட்டத்தின்படி பயிரிட்டுள்ளனர்.

இதற்காக, மாணவர்களுக்கு தலா 2 சென்ட் வீதம் நிலம் ஒதுக்கப்பட்டது. எனவே, விதை விதைப்பது முதல் நடவு, களையெடுத்தல், உரமிடுதல் மற்றும் அறுவடை வரையிலான அனைத்து தொழில்நுட்பங்களையும் மாணவர்களே மேற்கொண்டனர். மொத்தம் 1.20 ஏக்கர் நிலப்பரப்பில் 2.5 டன் நெல் மகசூல் கிடைத்துள்ளது.

இந்த ரகத்தின் தனித் தன்மையாக 10 சதவிகிதம் அதிக மகசூல் கிடைத்துள்ளது. மேலும், குலை நோய் மற்றும் தத்துப் பூச்சிகளுக்கு எதிராக வளரும் திறன், சமைப்பதற்கு ஏற்ற திறன், வறட்சியைத் தாங்கும் சக்தி போன்றவற்றை மாணவர்கள் செய்முறை மூலம் நேரடியாக அனுபவம் பெற்றனர்.

இச்செய்முறை பாடத்திட்டத்தின் உதவிப் பேராசிரியர்கள் ஜெ. சுகுமார், பி. குஞ்சம்மாள், ஹெச். மாரியப்பன் ஆகியோர், மாணர்களுக்கு வழிகாட்டியாக இருந்தனர். மேலும், கல்லூரி முதல்வர் சிவசுப்பிரமணியம் இப்புதிய ரக நெல் அறுவடையை தொடக்கி வைத்தார். கல்லூரி உதவி இயக்குநர் மோகன் மற்றும் பேராசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## அவிநாசியில் ரூ. 1.10 கோடிக்கு பருத்தி ஏலம்

**அவிநாசி,**

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ. 1.10 கோடிக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது (படம்).

ஏ.சி.எம்.எஸ். மையத்தில் நடைபெற்ற இந்த ஏலத்துக்கு, 6,200 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. குவிண்டால் ஒன்றுக்கு டி.சி.எச். ரகப் பருத்தி ரூ. 5,500 முதல் ரூ. 6,360 வரையிலும், ஆர்.சி.எச். ரகப்பருத்தி ரூ. 4700 முதல் ரூ. 5300 வரையிலும், மட்டரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2400 முதல் ரூ. 3000 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ஒரு கோடியே 10 லட்சம் ரூபாய்க்கு ஏலம் நடைபெற்றது.

இதில், குன்னத்தூர், செங்கப்பள்ளி, சேலம், திருப்பத்தூர், ஆத்தூர், மேட்டூர், தர்மபுரி, பொம்மிடிப்பூண்டி, அந்தியூர், குண்டடம், கிணத்துக்கடவு, அன்னூர், கோபி, நீச்சாம்பாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து 650 பருத்தி விவசாயிகளும், 16 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர். இது குறித்து சங்கத் தலைவர் மு.சுப்பிரமணியம் கூறியது:

பருத்தி சென்ற வாரத்தை விட 1,300 மூட்டைகள் வரத்து குறைவாக இருந்தது. இருப்பினும் பருத்தி விலை குவிண்டாலுக்கு ரூ. 150 அதிகரித்திருந்தது. மேலும் ஏ.சி.எம்.எஸ். சார்பில் சேவூர், அவிநாசி ஆகிய பகுதிகளில் நடைபெற்று வந்த வாழைக்காய் ஏலம் பருவம் நிறைவடைந்ததால், ஏலம் மார்ச் 24-ஆம் தேதியுடன் முடிவடைந்தது. அடுத்த பருவத்தில் வாழைக்காய் ஏலம் வழக்கம் போல துவங்கும் என்றார்.

## கோடை வெப்பத்தால் கறிக்கோழி விற்பனை சரிவு

**கோவை,**

கடும் கோடை வெப்பம் மற்றும் பள்ளிகளில் இறுதித்தேர்வுகள் ஆகியவற்றால் கோழி இறைச்சி நுகர்வு குறைந்துள்ளதாக கறிக்கோழி வட்டாரத்தில் கூறப்படுகிறது. பல்லடம் பகுதியில் ஏராளமான கறிக்கோழிப்பண்ணைகள்

உள்ளன. இங்கு தினசரி 6 லட்சம் கறிக்கோழிகள் உற்பத்தி செய்யப்பட்டு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், கேரள மாநிலத்திற்கும் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன. கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை உற்பத்தியாளர்கள் தினசரி நிர்ணயித்து அறிவிக்கின்றனர்.

இந்த மாதத் தொடக்கத்தில் பண்ணை விலை உயிருடன் கோழி கிலோ ரூ. 67 ஆகவும், சில்லரை விலை உயிருடன் கிலோ ரூ. 89 ஆகவும், தோலுடன் கறி ரூ. 125 ஆகவும், தோல் உரித்தது ரூ. 134 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. இந்நிலையில், 24-ஆம் தேதி, பண்ணை விலை உயிருடன் கிலோ ரூ. 58 ஆகவும், சில்லரை விலை உயிருடன் கிலோ ரூ. 80 ஆகவும், தோலுடன் கறி ரூ. 112 ஆகவும், தோல் உரித்தது ரூ. 120 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டது. பண்ணைக் கொள்முதல் விலை குறைவதால் உற்பத்தியாளர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து கறிக்கோழிபண்ணை உற்பத்தியாளர் ஒருவர் கூறியது:

ஒரு கிலோ கறிக்கோழி உயிருடன் உற்பத்தி செய்ய ரூ. 70 வரை செலவாகிறது. தற்போது, ஒரு கிலோ கோழி இறைச்சி ரூ. 58-க்கு விற்பதால் கிலோவுக்கு ரூ. 10 நஷ்டம் ஏற்படுகிறது. ஈஸ்டர் நோன்பு காரணமாக நுகர்வு குறைவு என்பது வழக்கமானது.

இப்போது நிலவும் கடும் கோடை வெப்பம் மற்றும் பள்ளிகளில் இறுதித் தேர்வு ஆகியவற்றால் கோழி இறைச்சி நுகர்வு மேலும் குறைந்துள்ளது. மேலும், இந்த ஆண்டு கேரளத்துக்கு கறிக்கோழி விற்பனைக்கு செல்வது 60 சதவீதம் குறைந்ததும் கறிக்கோழி விலை வீழ்ச்சிக்கு காரணம் என்றார்.

## வெங்காயம் விலை வீழ்ச்சி: தாளவாடி விவசாயிகள் கவலை

**சத்தியமங்கலம்,**

சின்னவெங்காயம் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால், தாளவாடி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சத்தி அடுத்த தாளவாடி மலைப் பகுதியில் உள்ள தொட்டகாஜனூர், எரகனள்ளி, பாரதிபுரம், பனகள்ளி, திகினாரை, நெய்தாளபுரம் உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களில் சுமார் 8 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சின்னவெங்காயம் 3

மாதங்களுக்கு முன் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது அறுவடை செய்யும் பணி நடைபெறுகிறது.

இதுகுறித்து திகினாரை விவசாயி செல்வராஜ் கூறியது: கடந்த 3 மாதங்களுக்கு முன் சின்னவெங்காயம் கிலோ ரூ.50 வரை விற்பனையானது. இதனால் இப்பகுதி விவசாயிகள் அதிக அளவில் வெங்காயம் பயிரிட்டனர். விதை வெங்காயம் கிலோ ரூ.80-க்கு வாங்கி நடவு செய்து களையெடுத்தல், உரமிடுதல், மருந்து தெளித்தல் உள்ளிட்ட செலவினங்கள் ஒரு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. அறுவடை செலவு கிலோ ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய் ஆக உள்ளது. தற்போது, வெங்காயம் கிலோ ரூ.9க்கு விற்கப்படுகிறது. விவசாயிகள் நேரடியாக தோட்டத்துக்கு வந்து கொள்முதல் செய்கின்றனர். ஏக்கர் ஒன்றுக்கு 20 குவிண்டால் மகசூல் கிடைக்கிறது. விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாத விலை கிடைப்பதால், பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளோம் என்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 51.90 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 51.90 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 827 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர்இருப்பு 4.9 டி.எம்.சி.

## கோடை வெயில் அதிகரிப்பு: கோழிகளின் இறப்பைத் தடுக்க பண்ணைகளில் செயற்கைக் குளிர்விப்பு

**நாமக்கல்,**

கோடை வெயில் அதிகரித்து வரும் நிலையில், பண்ணைகளில் கோழிகளின் இறப்பைத் தடுக்க செயற்கைக் குளிர்விப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. தவிர, முட்டை உற்பத்தி குறைவதைத் தடுக்கத் தீவனங்களில் எரிசக்தியின் அளவு

குறைத்து அளிக்கப்படுகிறது. நாமக்கல் மண்டலத்திலுள்ள சுமார் ஆயிரம் பண்ணைகளில் சுமார் 4 கோடி முட்டைக் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. இவற்றின் மூலம் நாளொன்றுக்கு 3.25 முதல் 3.40 கோடி முட்டைகள் பெறப்பட்டு, பல்வேறு மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகின்றன. தற்போது கோடை வெயின் தாக்கம் அதிகரித்து கடந்த சில நாள்களாகப் பகல் வெப்பம் 100 டிகிரி பாரன்ஹீட் முதல் 103 டிகிரி பாரன்ஹீட் வரை வீசுகிறது. அதிகரித்து வரும் இந்த வெப்பத்தால் பண்ணைக் கோழிகளிடையே சோர்வும், இறப்பும் அதிகரிக்கும் என்று நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியிலுள்ள வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதையடுத்து, பண்ணைகளில் கோழிகளின் இறப்பைத் தடுக்கச் செயற்கைக் குளிர்விப்பு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம், பண்ணைகளில் கோழிகள் வைக்கப்பட்டுள்ள இடங்களில் வெப்பம் அதிகளமாக உள்ள நண்பகல் நேரத்தில் குழாய்கள் மூலம் குளிர்ந்த நீர் தெளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம், கோழிகளின் உடல் வெப்பம் சீராக வைக்கப்படுவதால் கோழிகளின் இறப்பைக் குறைக்க முடியும் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையே, கோடை வெயிலால் முட்டை உற்பத்தி கடந்த சில நாள்களில் 3 முதல் 4 சதம் வரை குறைந்துள்ளதாகவும், இது மேலும் குறையும் என்றும் பண்ணையாளர்கள் தெரிவித்தனர். இதன்படி, பண்ணைகளில் முட்டை உற்பத்திக் குறைவதைத் தடுக்க நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியின் அறிவுறுத்தலின் அடிப்படையில், கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனங்களின் எரிசக்தியின் அளவு குறைத்து அளிக்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கத் தலைவர் ஆர்.நல்லதம்பி கூறியது: கோடை காலம் என்றால் பண்ணைகளில் கோழிகளின் இறப்பு அதிகரிப்பதும், முட்டை உற்பத்திக் குறைவதும் வழக்கமாகும்.

இந்த இறப்பை அதிகரிக்காமல் தடுக்கச் செயற்கைக் குளிர்விப்பு முறையைப் பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதேபோல, முட்டை உற்பத்திக் குறைவதைத் தடுக்கத் தீவனத்தில் எரிசக்தியின் அளவைக் குறைக்கவும், கோழிகளுக்கு குளுக்கோஸ் போடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

## முட்டை விலை

**நாமக்கல்,**

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.2.70, சென்னையில் ரூ.3.05. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ.58, முட்டைக் கோழி கிலோ ரூ.42.

## காளான் வளர்ப்பு இலவசப் பயிற்சி

**புதுக்கோட்டை,**

புதுக்கோட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலை வாய்ப்பு பயிற்சி நிலையத்தில் காளான் வளர்ப்பு குறித்த 6 நாள் இலவசப்பயிற்சியில் சேர கிராமப்புற இளைஞர்கள் ஏப். 14-க்குள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அப்பயிற்சி நிலைய இயக்குநர் சு. ரமேஷ் வெளியிட்ட தகவல்: புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்கு காளான் வளர்ப்பு குறித்த ஆறு நாள் இலவசப் பயிற்சியளிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி காலத்தில் மதிய உணவும்,வழங்கப்படும்.

இதில் சேர, 18 வயது முதல் 35 வயதுக்குள்பட்ட கிராமப்புறத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், 3 பாஸ்போர்ட் அளவு புகைப்படம், மதிப்பெண் , மாற்றுச் சான்றிதழ், வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை நகல்களையும் இணைத்து, கைப்பேசி எண்ணையும் குறிப்பிட்டு 14.4.2014-க்கு முன்பாக நிலைய இயக்குநர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிராமிய சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிலையம், 1506-02 மேல நான்காம் வீதி, ( திலகர்திடல் எதிரில்) புதுக்கோட்டை 622001 என்ற முகவரியில் நேரில் விண்ணப்பிக்கலாம். மேலும் விபரங்களுக்கு 04322-225 339, 99947 37185 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் மையத்தை இடம் மாற்றம் செய்வதை கைவிட கோரிக்கை

**குலசேகரம்,**

குமரி மாவட்டம், பேச்சிப்பாறையில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் நிலையத்தை திருப்பதிசாரத்துக்கு மாற்றும் முடிவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கைவிட வேண்டுமென்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதுகுறித்து குமரி மாவட்ட பாசனத்தார் சபைத் தலைவர் வின்ஸ் ஆன்டோ கூறியதாவது: கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் வேளாண் அறிவியல் மையம் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இந்த மையம் மூலம் மலைவாழ் விவசாயிகள் உள்பட அனைத்து தரப்பு விவசாயிகளுக்கும் அனைத்து வகை பயிர்கள் குறித்த நவீன வேளாண் தொழில்நுட்ப பயிற்சிகள், செயல்முறை விளக்கங்கள், கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில் இந்த மையத்தை திருப்பதிசாரத்துக்கு மாற்றும் நடவடிக்கை ஏற்புடையதல்ல. திருப்பதிசாரம் நெல் ஆராய்ச்சிக்கு மட்டுமே உகந்த இடமாகும். எனவே, பேச்சிப்பாறையில் வேளாண் அறிவியல் மையம் தொடர்ந்து இயங்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேர்தல் நேரம்: மேலும் இந்த மையத்தை தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மாற்றம் செய்யும் செயல் தேர்தல் நடத்தை விதிகளுக்கு முரணானதாகும். இதைதடுக்க முயன்ற முன்னோடி விவசாயி பி. ஹென்றி மீது பதியப்பட்ட வழக்கை வாபஸ் பெறுவதுடன், விவசாயியை மிரட்டியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## குமரியில் சுட்டெரிக்கும் வெயில் வெள்ளரிப்பிஞ்சு விலை ஏறுமுகம்

**கன்னியாகுமரி,**

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் வெப்பத்தை தணிக்க வெள்ளரிப்பிஞ்சு, தர்பூசணி ஆகியவற்றை மக்கள் அதிகமாக வாங்கிச் செல்கின்றனர். தேவை அதிகரித்துள்ள நிலையில் இவைகளின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

ஏப்ரல் மாதம் தொடங்குவதற்கு முன்பே வெயிலின் தாக்கம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நிகழாண்டு அதிகரித்துள்ளது. வெயில் காலத்தில் பல்வேறு நோய்களும் தாக்கும் அபாயம் அதிகரிக்கும் என்பதால் முற்பகல் 11 மணி தொடங்கி பிற்பகல் 3 மணி வரை குழந்தைகளை வெளியில் அழைத்துச் செல்லக்கூடாது என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர். இதனால் மக்கள் வீடுகளில் முடங்கியுள்ளனர்.

கோடை காலத்தில் மக்கள் அதிகமாக பயன்படுத்தும் வெள்ளரிப் பிஞ்சுகளில் 95 சதவீதம் நீர்ச்சத்து உள்ளதால் உடல் வெப்ப நிலையையும், நீர்ச்சத்தையும் சீராக பராமரித்து உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றுகிறது.

இதனால் இவற்றை மக்கள் விரும்பி வாங்கிச் செல்கின்றனர். தற்போது இவற்றின் தேவை அதிகரித்துள்ளதால் ஒரு கிலோ ரூ. 60-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் புதன்கிழமை கிலோ ரூ. 100-ஆக உயர்ந்து காணப்பட்டது.

விலை உயர்வு குறித்து வெள்ளரி வியாபாரியான எம்.ராபர்ட் கூறும் போது, இந்தியாவை தாயகமாக கொண்ட வெள்ளரி தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் தோட்டப்பயிராக பயிரிடப்பட்டு வருகிறது. நிகழாண்டு பருவமழை தவறிவிட்ட காரணத்தால் வெள்ளரி விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. இதனால் வெளி மாவட்டங்களில் இருந்து வரும் வெள்ளரி வரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

தேவை அதிகரித்துள்ள நிலையில் விலையேற்றம் தவிர்க்க முடியாததாகி விட்டது. இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் மேலும் விலை உயரும் வாய்ப்பு உள்ளது என்றார் அவர்.

**புத்தனாறு கால்வாய் சீரமைக்கும் பணி**

**கன்னியாகுமரி,**

கடை வரம்பு பகுதி விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று ரூ. 18 லட்சம் செலவில் நாஞ்சில் நாடு புத்தனாறு கால்வாய் சீரமைக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. குமரி மாவட்டத்தின் பிரதான பாசனக் கால்வாயாக நாஞ்சில் நாடு புத்தனாறு கால்வாய் விளங்கி வருகிறது. பேச்சிப்பாறை அணையில்

இருந்து கடைவரம்பு பகுதி பாசனத்துக்காக இந்த கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்படுகிறது.

இந்த கால்வாயின் பல பகுதிகளிலும் ஆகாயத்தாமரைச் செடிகள் படர்ந்து ஆக்கிரமித்துள்ள நிலையில் அதனை அகற்ற வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் கும்பப்பூ சாகுபடி முடிவடையும் நிலையில் பேச்சிப்பாறை அணை மூடப்பட்டுள்ளது. இதனால் இக்கால்வாயில் தண்ணீர் இல்லாமல் உள்ளது. விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று கால்வாய் சீரமைக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. இம்மாத இறுதிக்குள் பணிகள் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ஏறுமுகத்தில் இஞ்சி விலை**

**ஆலங்குளம்,**

திருநெல்வேலி மாவட்டத்தில் இஞ்சி விலை கடுமையாக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டம், கூடலூர் மற்றும் மேட்டுப்பாளையம் பகுதிகளில் அதிகளவு இஞ்சி விளைவிக்கப்படுகிறது. அங்கு தற்போது இஞ்சி விளைச்சல் கடுமையாக குறைந்ததையடுத்து திருநெல்வேலி உள்ளிட்ட வெளி மாவட்டங்களுக்கு அனுப்பப்படும் இஞ்சி வெகுவாகக் குறைந்துள்ளது. இது மருந்துக்கு மட்டுமல்லாது தற்போது உணவுக்கும் அதிக அளவில் உபயோகப்படுத்தப்படுவதால் இதன் தேவை அதிகரித்துள்ளது. இதனால் இஞ்சியின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த வாரம் 50 கிலோ கொண்ட ஒரு மூட்டை இஞ்சி ரூ.3,500 முதல் 4,000 வரை விற்று வந்த நிலையில், இந்த வாரம் இது ரூ. 6,000 முதல் 6,500 என அதிகரித்துள்ளது. சில்லரை விற்பனையில் 80 ரூபாய்க்கு விற்ற இஞ்சி 125-150 ரூபாயாக அதிகரித்துள்ளது. இதனால் ஹோட்டல்கள் மற்றும் வீடுகளில் இஞ்சியின் பயன்பாடு வெகுவாக குறைந்துள்ளது. இது தொடர்பாக வியாபாரி ஒருவர் கூறியதாவது: கடந்த ஆண்டு நீலகிரி மாவட்டத்தில் பருவமழை குறைந்ததன் எதிரொலியாக இஞ்சி விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. வெளிமாநில புது ரக இஞ்சி வந்தால் ஓரளவு விலை குறைய வாய்ப்புள்ளது என்றார் அவர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வீணாகும் கசாரு மீன்களை மதிப்புக் கூட்டிய உணவுப் பொருளாக மாற்றும் பயிற்சி**

**சிதம்பரம்**: பரங்கிப்பேட்டை கடல்வாழ் உயிரியல் உயராய்வு மையத்தில் வீணாகும் கசாரு மீன்களை விலை மதிப்புள்ள மதிப்புக் கூட்டிய உணவுப் பொருளாக மாற்றுவது குறித்த பயிற்சி முகாம் நடந்தது.

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகம் கடல் வாழ் உயிரியல் உயராய்வு மையம் மற்றும் டில்லி மனிதவள மேம்பாட்டு ஆணையம் சார்பில் ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்களுக்கு "வீணாகும் கசாரு மீன்களை விலைமதிப்புள்ள மதிப்புக் கூட்டிய உணவுப் பொருளாக மாற்றுவது' குறித்த பயிற்சி பரங்கிப்பேட்டை உயராய்வு மையத்தில் நடந்தது. பல்கலைக் கழக கடல் வாழ் உயிரியல் உயராய்வு மைய இயக்குனர் பேராசிரியர் கதிரேசன் தலைமை தாங்கி பயிற்சியை துவக்கி வைத்தார். பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள், பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்கள் 29 பேர் பங்கேற்றனர்.

பேராசிரியர் புருஷோத்தமன், மீன்கள் வீணாகுவதற்குரிய காரணிகள், அதனை எப்படி கெடாமல் பாதுகாப்பது குறித்து கருத்துரை வழங்கினார். பேராசிரியர் அஜ்மல்கான் பரங்கிப்பேட்டை பகுதியில் கசாரு மீன் வகைகள், மலிவு விலையில் கிடைக்கும் மீன்களை எப்படி மதிப்புக் கூட்டிய பொருளாக மாற்றுவது குறித்து பேசினார். பேராசிரியை லைலா, மீன்கள் தரம் கண்டறியும் முறை, மீன்களை சுகாதாரமாக எப்படி சேமிப்பது. பல வித மீன் வகைகளை எவ்வாறு தரமாக உற்பத்தி செய்வது குறித்து பேசினார். மருத்துவத் துறை பேராசிரியை டாக்டர் இன்மொழி, மீனில் அடங்கியுள்ள ஒமேகா - 3 என்ற கொழுப்பு அமிலத்தின் முக்கியத்துவம், மனித உடலுக்கு தேவை குறித்து பேசினார். நிகழ்ச்சியில், பேராசிரியர் முருகன், ஓய்வு பெற்ற பேராசிரியர் புருஷோத்தமன், ஆசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் உட்பட பலர் பங்கேற்றனர். பேராசிரியர் சீனிவாசன் நன்றி கூறினார்.

## பயிர் மகசூல் போட்டி

**அவலூர்பேட்டை**: மேல்மலையனூர் பகுதி விவசாயி மாவட்ட அளவிலான இரவை வேர்க்கடலை பயிர் மகசூல் போட்டியில் இரண்டாமிடம் பெற்றார். மேல்மலையனூர் ஒன்றியம் தேவந்தவாடி கிராமத்தை சேர்ந்தவர் முருகன். இவர் மாவட்ட அளவில் நடந்த இரவை வேர்க்கடலை பயிர் மகசூல் போட்டியில் இரண்டாமிடம் பெற்றுள்ளார். இவருக்கு ரொக்கத்தொகை 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. இதே போல் நெல், உளுந்து, மக்காசோளம், கம்பு, கேழ்வரகு உள்ளிட்ட பயிர் மகசூல் போட்டிகள் மாநில மற்றும் மாவட்ட அளவில் நடக்கிறது. இதில் விவசாயிகள் கலந்து கொண்டு பலனடைய வேண்டும் என மேல்மலையனூர் உதவி வேளாண் இயக்குனர் பழனிவேலு தெரிவித்துள்ளார்.

## வரத்துகுறைவால் தக்காளி விலை எகிறியது

**கிணத்துக்கடவு** : கிணத்துக்கடவு தினசரி மார்க்கெட்டில் தக்காளி வரத்து குறைவானதால், அதன் விலை உயர்ந்துள்ளது. கிணத்துக்கடவு பகுதிகளில் தற்போது, தக்காளி சீசன் நிறைபெற்றுள்ள நிலையில், செடிகளில் காய்ப்புத்திறன் குறைந்து வருகிறது. இதனால், செடிகளில் இருந்து விவசாயிகள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தக்காளிகளை பறித்து, தினசரி மார்க்கெட்டுக்கு நேற்று கொண்டு வந்தனர். சீசன் இல்லாததால், தக்காளி வரத்து குறைவாக வந்தது.இதனால் அங்கு நடந்த ஏலத்தில், கேரளா மற்றும் உள்ளூர் வியாபாரிகளுக்குள் போட்டி ஏற்பட்டதால், 15 கிலோ எடையுடன் கூடிய தக்காளி பெட்டி ஒன்று அதிகப்பட்சமாக 110 ரூபாய்க்கு ஏலம் போனது.கடந்த வாரத்தில், இது அதிகபட்சமாக 60 ரூபாய்க்கு ஏலம் போனது. வரத்து குறைந்ததால், தக்காளி விலை உயர்ந்துள்ளது. மேலும், வெயில் சுட்டெரித்து வருவதால், மானவாரி நிலங்களில் தக்காளி சாகுபடி நிறுத்தப்பட்டுள்ளது. தண்ணீர் வசதியுள்ள நிலங்களில் மட்டுமே தக்காளி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாமகிரிப்பேட்டையில் ரூ.60 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனை



**நாமகிரிப்பேட்டை:** ஈரோட்டிற்கு அடுத்து நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டையில் தான் மஞ்சள் மண்டிகள் அதிகம் உள்ளன.

இங்கு, ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் விற்பனை கூட்டுறவு சங்கம் (ஆர்.சி.எம்.எஸ்) உட்பட தனியார் மண்டிகள் உள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை நாமகிரிப்பேட்டையில் மஞ்சள் ஏலம் நடந்தது. அப்போது, விரலி 903 மூட்டைகளும், உருண்டை 481 மூட்டைகளும், பனங்காலி 300 மூட்டைகளும் என மொத்தம் 1,684 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. செவ்வாய் அன்று ஒரே நாளில் ஆர்.சி.எம்.எஸ்சில் ரூ.60 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது.

**நடப்பு ரபி பருவத்தில் 1.15 கோடி டன் கோதுமை கொள்முதல்**



**புதுடெல்லி:** நடப்பு ரபி பருவத்தில் சுமார் 1.15 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வட மாநிலங்களில் பருவ மழை குறிப்பிட்ட காலத்தில் பெய்யாததால் கோதுமை சாகுபடி செய்வது தாமதமாக தொடங்கியது. இதனால், பஞ்சாப், ஹரியானா ஆகிய மாநிலங்களில் கோதுமை அறுவடை தாமதமாகும் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். வரும் ஏப்ரல் 2வது வாரத்தில் அறுவடை தொடங்கியதும் சந்தைக்கு கோதுமை வரத்து அதிகரித்து விற்பனை விறுவிறுப்பாக இருக்கும்.

அப்போது, தனியார் மற்றும் இந்திய உணவுக் கழகமும் கொள்முதல் பணியில் தீவிரம் காட்டும் என்றும் வேளாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். நடப்பு ரபி பருவத்தில் சுமார் 1.15 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்படும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ரபி பருவத்தில் 1.10 கோடி டன் கோதுமை கொள்முதல் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**பொய்கை மாட்டுச் சந்தையில் மாடுகள் ரூ.10 ஆயிரம் வரை விலை குறைத்து விற்பனை**

**வேலூர்,** :பொய்கையில் நேற்று நடந்த மாட்டுச்சந்தையில் மாடுகள் ரூ.10 ஆயிரம் வரை விலை குறைத்து விற்பனை செய்யப்பட்டது.

வேலூர் மாவட்டத்தில் மிகவும் புகழ்பெற்றது பொய்கை மாட்டுச் சந்தை. இது ஒவ்வொரு வாரமும் செவ்வாய் கிழமையில் நடப்பது வழக்கம். அதன்படி நேற்று காலை 6 மணிக்கு பொய்கை மாட்டுச்சந்தை கூடியது. இங்கு வேலூர்,

திருவண்ணாமலை, காஞ்சிபுரம், ஒசூர், தருமபுரி உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்கள் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்தும் 1000க்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டது. வேலூர் மாவட்டத்தில் மிகவும் புகழ்பெற்றது பொய்கை மாட்டுச் சந்தை. இது ஒவ்வொரு வாரமும் செவ்வாய் கிழமையில் நடப்பது வழக்கம். அதன்படி நேற்று காலை 6 மணிக்கு பொய்கை மாட்டுச்சந்தை கூடியது. இங்கு வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், ஒசூர், தருமபுரி உள்ளிட்ட சுற்றுவட்டார மாவட்டங்கள் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகம் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்தும் 1000க்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டது. இதில் பசு மாடு ரூ.10 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரம் வரையிலும், எருது மாடுகள் ரூ.15 ஆயிரம் முதல் ரூ.65 ஆயிரம் வரையிலும், எருமை மாடுகள் ரூ.25 ஆயிரம் முதல் ரூ.45 ஆயிரம் வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. வறட்சி காலம் தொடங்கிவிட்டதால் கடந்த வாரத்தை விட இந்த வாரம் பசுமாடு ரூ.3 ஆயிரம் வரையிலும், எருது மாடுகள் ரூ.5 ஆயிரம் வரையிலும், எருமை மாடுகள் ரூ.10 பத்தாயிரம் வரையிலும் விலை குறைத்து விற்பனை செய்யப்பட்டது.

தீவனமில்லாததால் வியாபாரிகள் யாரும் விலை கேட்க முன்வராததால் மாடுகளின் விற்பனை பாதியாக சரிந்துள்ளது. இதனால் வெளியூர்களில் இருந்து மாடுகளை ஏற்றிவந்த வியாபாரிகள் ஏமாற்றத்துடன் மாடுகளை திருப்பி கொண்டுசென்றனர்.

**பேராவூரணி வட்டாரத்தில் வேளாண் திட்டப்பணிகளை இணை இயக்குநர் ஆய்வு**

**பேராவூரணி,**: தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சேகர் பேராவூரணி வட்டாரத்தில் நடந்து வரும் வேளாண் திட்டப்பணிகளை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் காலகத்தைச் சேர்ந்த விவசாயி கிருஷ்ணமூர்த்திக்கு ரூ.15 ஆயிரம் மான்ய விலையில் வழங்கப்பட்ட தண்ணீர் கொண்டு செல்லும் குழாய் களை ஆய்வு செய்தார். துறவிக்காடு பகுதியில் விவசாயி அன்பழகன் வயலில் அமைக்கப்பட்டிருந்த ஒரு ஹெக்டேர் கோ.ஜி 7 ரக துவரை குழிமுறை நடவு பாத்தியினை பார்வையிட்டு

பயிர் நன்கு வளர்ச்சியடைய செடிகளை களைத்துவிட அறிவுரை கூறினார். துவரை ஒரு ஹெக்டேர் செயல்விளக்கம் அமைத்திட தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ. 7500 மான்யம் வழங்கப்பட்ட விபரம் குறித்து கேட்டறிந்தார். சூரியசக்தி மூலம் இயங்கும் 5 எச்பி குதிரை திறன் கொண்ட பம்புசெட் புனல்வாசல் கிராமத்தில் விவசாயி கலைச் செல்வி வயலில் இயங்குவது, எண்ணெய்ப்பனை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் குறிச்சி விவசாயி பால சுப்பிரமணியன் வயலில் நடவு மேற்கொள்ளப்பட்ட எண்ணெய்ப்பனை கன்றுகளை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார். பேராவூரணி வேளாண்மை உதவி இயக்குநர் ஈஸ்வர், வேளாண்மை அலுவலர் முருகேசன், துணை வேளாண்மை அலுவலர் மணிமாறன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**காரைக்கால் மாவட்டத்தில் 578 ஏக்கர் தரிசு நிலத்தில் பருத்தி சாகுபடி தீவிரம்**

**காரைக்கால்**, : காரைக்கால் மாவட்டத்தில் சுமார் 578 ஏக்கர் தரிசு நிலத்தில் பருத்தி சாகுபடி பணிகள் நடைபெற்று வருகிறது.

காரைக்கால் அடுத்த நெடுங்காடு, மேலகாசாகுடி, திருநள்ளாறு உள்ளிட்ட பகுதிகளில் 578 ஏக்கர் தரிசு நிலத்தில் ஒட்டுரக பிடி பருத்தி, கடந்த பிப்ரவரி முதல் வாரத்தில் விதைக்கப்பட்டு தற்போது களை எடுத்து உரமிடும் பணி நடைபெற்று வருகிறது.

பருத்தியின் தற்போதைய நிலையை, மாவட்ட கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன் தலைமையில், பஜன்கோ வேளாண் கல்லூரி நோயியல் துறை பேராசிரியர் ரத்தினசபாபதி, பூச்சியல் துறை உதவி பேராசிரியர் காண்டீபன் ஆகியோர்களை கொண்ட குழு ஆய்வு செய்து, பயிர் வளர்ச்சிக்கான ஆலோசனைகளை வழங்கியது.

மதியழகன் கூறுகையில், களை வெட்டிய பின், மண்ணை காயவிட்டு பின், உரமிட்டு மண் அணைத்து நீர் பாய்ச்சினால் மண்ணில் கிடைக்காத மெக்னீசிய சத்து பயிருக்கும் கிடைத்து, பழுப்பு இலை குறை நீங்கும்.

இளம் பருத்தி பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான வெள்ளை ஈ, இலைப்பேன், சப்பாத்தி பூச்சி மற்றும் தத்துப்பூச்சியின் தாக்குதல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அவ்வாறு காணப்பட்டால், ஹெக்டேருக்கு 100 மில்லி இமிடாகுளோபிரிட்,

அசிட்டாமிர்ட் அல்லது 600 மில்லி பாஸ்போமிடான் மருந்தை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பான் மூலம் காலை, மாலை இரு வேளை தெளித்தால் கட்டுப்படுத்தலாம் என்றார்.

**சிறு மூலிகைகளை வீட்டில் வளர்க்க இயற்கைவழி வேளாண்மை விழிப்புணர்வு பிரசாரம்**

**நிலக்கோட்டை,** : இயற்கைவழி வேளாண்மை பற்றி விழிப்புணர்வு பிரசாரம் டிரஸ்ட் சார்பில் வழங்கப்பட்டது.

நிலக்கோட்டை அருகே கவுண்டம்பட்டி, பெருமாள்கோயில்பட்டி, மாலப்பட்டி ஆகிய கிராமங்களில் திண்டுக்கல் பீஸ் டிரஸ்ட், அணை ப்பட்டி ரெட் டிரஸ்ட் ஆகிய வை இனைந்து தேசிய சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பிரசாரத்தை நடத்தியது. முன்னாள் பிள்ளையார்நத்தம் ஊராட்சிமன்ற தலை வர் நடராஜன் தலைமை வகித்து பிரசாரத்தை துவக்கி வைத்தார். ரெட் ட்டிஸ்ட் தலைவி முத்துபேச்சி முன் னிலை வகித்தார்.

இதில் இயற்கைவழி வே ளாண்மை முறையை பின் பற்றி வீட்டு தோட்டம் அமைப்பது, வீட்டு கழிவுகள் சமயலறை கழிவுகளை கொ ண்டு உரம்,பூச்சி விரட்டி களை எவ்வாறு தயாரிப்பது.

இயற்கை வழியில் பயிர் செய்யப்படும் காய்கறிகள், பழங்கள், முலிகைகள் ஆகியவற்றை மனிதன் ஊட்கொள் ளும் போது ஏற்படும் நன்மைகள்,சிறு முலிகைகளான கொத்தமல்லி, பிரண்டை, ஓமசெடி, இஞ்சி, சோற்று கற்றா ளை, துளசி, அருகு, கீரை வகைகள், சிறுகுருஞ்சான், முசுமுசுக்கை ஆகியவற்றை வீட்டில் வள ர்ப்பது குறித்தும், வீடுகள், விவசாய நிலங்களில் மரக்கன்றுகள் நடவேண்டும் உட்பட ஏராளமான கருத்துக்கள் கூறப்பட்டது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மகளிர்சுய உதவிகுழுவினர், விவசாய குழுவினர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**திருப்புவனம் பகுதியில் கோடைகால நெல்சாகுபடி துவக்கம்**

**திருப்புவனம்**, : திருப்புவனம் பகுதியில் கோடைகால நெல் சாகுபடி பணி துவங்கியுள்ளது. குறுகிய கால பயிர்களை விவசாயிகள் நடவு செய்து வருகின்றனர்.

தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பருவமழை போதிய அளவில் பெய்யவில்லை. இதனால் மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளில் விவசாயம் பொய்த்துப்போனது. கடனை வாங்கி விவசாய பணியில் ஈடுபட்ட பலர், போட்ட பணத்தை எடுக்க முடியாமலும், கடனை அடைக்க வழியின்றியும் பரிதவித்து வருகின்றனர். அரசு நிவாரணம் வழங்க கோரிக்கை விடுத்தும் உரிய பலனில்லை. இதனால் செய்வதறியாது பரிதவித்து வருகின்றனர்.

இதுஒருபுறம் இருக்க சில விவசாயிகள் மழை பெய்தாலும், பெய்யாவிட்டாலும் நெல் விவசாயத்தை செய்தே தீர்வது என்ற தீர்மானத்தில் உள்ளனர். திருப்புவனம் பழையனூர் வட்டாரம் கடும் வறட்சியில் சிக்கியுள்ளது. இருப்பினும் இப்பகுதியில் விவசாயிகள் மின்மோட்டார் பாசனம் மூலம் நெல் விவசாயத்தை தொடர்ந்து வருகின்றனர் பழையனூர், ஓடாத்தூர், வாகைக்குளம் உள்ளிட்ட பகுதிகள் வானம் பார்த்த பூமியாகும். இப்பகுதியில் தற்போதைய நிலையில் குடிப்பதற்கே தண்ணீர் தட்டுப்பாடாக உள்ளது.

இருந்தபோதும், விவசாயிகள் சிலர் கிணறுகளை வைத்து மோட்டார் மூலம் நீர் பெற்று பாசனம் செய்து வருகின்றனர். தற்போது கோடை காலம் என்பதால் அதற்கேற்ப குறுகிய காலப்பயிரான செல்லப்பொன்னி நெல்ரகத்தை பயிரிட்டுள்ளனர். விதை பாவி 27ம் நாளில் நாற்று பறிக்கின்றனர். தற்போது நடவு பணியில் கவனம் செலுத்தி வருகின்றனர்.

விவசாயி கருப்புச்சாமி கூறுகையில், `தற்போது கிணற்றில் இருப்பில் உள்ள தண்ணீரை வைத்து நடவு செய்துவிடுவோம். கோடை மழை கைகொடுத்தால் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. செல்லப்பொன்னி 90 நாள் பயிராகும். பராமரிப்பு செலவும் குறைவு என்பதால் இதனை நடவு செய்துள் ளோம் என்றார். கடுமை யான வறட்சி நிலவும் சூழலி லும், இயற்கை மீதுள்ள நம்பிக்கையில் விவசாயிகள் நெல்நடவு பணிகளை செய்து வருகின்றனர். உலக மக்களின் பசியை போக்கும் விவசாயிகளின் மனம் குளிர, இயற்கை தாய் மழை பொழிந்து கருணை செய்வாள் என்று நம்புவோம்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பெருந்துறை வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.25 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம்**



**பெருந்துறை,**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் சிறப்பு ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு விவசாயிகள் 734 மூட்டைகளில் 35 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய் மூட்டைகளை கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரம் கொப்பரை தேங்காய் ஒரு கிலோ குறைந்தபட்ச விலையாக 89 ரூபாய் 75 காசுக்கும், அதிகபட்ச விலையாக 92 ரூபாய் 50 காசுக்கும், 2–ம் தரம் கொப்பரை தேங்காய் ஒரு கிலோ குறைந்தபட்ச விலையாக 68 ரூபாய் 60 காசுக்கும், அதிகபட்ச விலையாக 87 ரூபாய் 60 காசுக்கும் என மொத்தம் ரூ.25 லட்சத்துக்கு விற்பனை ஆனது. கடந்த வாரம் சனிக்கிழமை நடந்த ஏலத்தை விட கொப்பரை தேங்காயின் விலை ஒரு கிலோவுக்கு 3 ரூபாய் கூடுதலாக இருந்தது. மாதத்தின் கடைசி சனிக்கிழமை என்பதால் வருகிற 29–ந்தேதி அன்று கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெறாது. மறு ஏலம் ஏப்ரல் 2–ந்தேதி புதன்கிழமை அன்று நடைபெறும் என்று பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மேலாண்மை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**கடும் வறட்சியால் ஊராட்சிகளில் குடிநீர் தட்டுப்பாடு: காண்டூர் கால்வாயில் இருந்து பாலாற்றுக்கு 2–ந் தேதி தண்ணீர் திறப்பு**

**ஆனைமலை,**

காண்டூர் கால்வாயில் இருந்து பாலாற்றில் வருகிற 2–ந் தேதி தண் ணீர் திறக்கப்படும் என்று பொதுப்பணித் துறை கண்காணிப்பு பொறி யாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

ஊராட்சிகள்

ஆனைமலை ஒன்றியத்திற் குட்பட்ட அர்த்தநாரி பாளை யம், ஜல்லிபட்டி, கம்பாலப் பட்டி, பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தை சேர்ந்த எஸ்.நல்லூர், உடுமலை ஒன்றி யத்தை சேர்ந்த செல்லப்பம் பாளையம், தேவனூர்புதூர், புங்கமுத்தூர் உள்ளிட்ட ஊராட்சிகள் பாலாற்றின் கரையில் அமைந்துள்ளன.

இந்த ஊராட்சிகளில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக பாலாற்றில் 20–க்கும் மேற்பட்ட உறை கிணறுகள் அமைக்கப்பட் டுள்ளன. பாலாற்றில் வெள்ளம் கரைபுரண்டோடி பல மாதங்களாகி விட்டன. இதனால் பாலாறு பாறை களாகவும், மண் மேடுகளாகவும் காட்சி அளிக்கிறது. பாலாற் றின் இரு கரைகளிலும் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தென்னை மரங்கள் கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

குடிநீர் தட்டுப்பாடு

மேலும் இந்த பகுதியில் கடுமையான வறட்சி ஏற்பட்டு உள்ளது. இதனால் மேற்கண்ட கிராமங்களில் குடிநீருக்கு மிகவும் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. குடிநீர் கிடைக்காமல் மக்கள் சிரமம் அடைந்து வருகிறார்கள். குடிநீர் ஆதாரமாக விளங் கும் காண்டூர் கால்வாயிலிருந்து பாலாற்றில் தண்ணீர் திறந்து விட வேண்டுமென பொது மக்கள் மற்றும் ஊராட்சி நிர்வாகத்தினர் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்த னர். இதனை ஏற்ற தமிழக அரசு காண்டூர் கால்வாய் மூலம் வினாடிக்கு 40 கன அடி வீதம் 10 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டது. இதனால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

<u>திறக்க வில்லை</u>

ஆனால் பொதுப்பணித் துறையினர் தண்ணீர் திறக்க வில்லை. இதனால் உள்ளாட்சி நிர்வாகங்கள் சார்பில் பாலாற் றில் அமைக்கப்பட்டுள்ள உறைகிணறுகள் வற்றியதால் குடிநீர் வினி யோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் குடிநீர் இன்றி அவதிப்படுகின்ற னர். மேலும் பாலாற்றில் எப்போது தண்ணீர் திறக்கப் படும் என்று எதிர்பார்த்துள்ளனர். இது குறித்து பொதுப் பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன் கூறியதாவது:–

<u>2–ந் தேதி தண்ணீர் திறப்பு</u>

காண்டூர் கால்வாய் மூலம் நல்லாற்றில் வினாடிக்கு 40 கன அடிவீதம் 10 நாட்களுக்கு தண்ணீர் வழங்க பிப்ரவரி மாதம் 24–ந்தேதி அரசாணை வெளியிடப்பட்டது. இதனை உறுதியாக பின்பற்றி தண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்படும். வருகிற 2–ந்தேதி முதல் காண்டூர் கால்வாயில் இருந்து நல்லாறு வழியாக பாலாற்றில் குடிநீர் தேவைக்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**தஞ்சையில் இருந்து சரக்கு ரெயில்மூலம் ராஜபாளையத்திற்கு 954 டன் நெல்மூட்டைகள் அரவைக்கு கொண்டுசெல்லப்பட்டன**



**தஞ்சாவூர்,**

தஞ்சையில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 954 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக ராஜபாளையத்திற்கு கொண்டு செல்லப்பட்டன.

<u>நெற்களஞ்சியம்</u>

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை மாவட்டம் விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. தற்போது தஞ்சை மாவட்டத்தில் சம்பா அறுவடை பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. அறுவடை செய்யப்படும் நெல் தமிழக அரசின் நுகர்பொருள் வாணிபகழகங்கள் மூலம் நேரிடையாக கொள்முதல் செய்யப்பட்டு வருகின்றன. அங்கிருந்து நெல் மூட்டைகள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள சேமிப்புக்கிடங்குகளுக்கு கொண்டு செல்லப்பட்டு இருப்பு வைக்கப்படுகின்றன. இது தவிர வெளி மாவட்டங்களுக்கு லாரிகள் மூலமும், சரக்கு ரெயில் மூலமும், தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளுக்கும் அரவைக்கு நெல் மூட்டைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

<u>954 டன்</u>

தஞ்சையில் இருந்து நேற்று சரக்கு ரெயில் மூலம் 954 டன் நெல்மூட்டைகள் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதற்காக பல்வேறு கொள்முதல் நிலையங்கள் மற்றும் சேமிப்புக்கிடங்கில் இருந்து 90 லாரிகளில் 23 ஆயிரத்து 850 நெல் மூட்டைகள் ஏற்றி வரப்பட்டு 21 ரெயில் வேகன்களில் அனுப்பி வைக்கப்பட்டன.

**வானிலை ஆராய்ச்சி மையத்தில் அதிநவீன ரேடார் அமைக்கும் பணி தீவிரம்**

**காரைக்கால்,**

காரைக்கால் வானிலை ஆராய்ச்சி மையத்தில் அதிநவீன ரேடார் அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. காரைக்காலுக்கு வந்திருந்த காரைக்கால் ரேடார் நிலைய இயக்குநர் பிஜூ நிருபர்களிடம் கூறியதாவது:–

**ரேடார் நிலையம்**

காரைக்காலில் புயல் கண்டறியும் ரேடார் நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்தநிலையில் பாரதீப், அகர்தலா, லக்னோ, பாட்னா, டெல்லி, ஐதராபாத், பாட்டியாலா, கோவா, போபால், நாக்பூர் மற்றும் காரைக்கால் உள்ளிட்ட பல பகுதிகளில் அதிநவீன வசதிகள் கொண்ட 'டாப்ளர் வெதர் ரேடார்' களை அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதில் காரைக்கால், கோவா மற்றும் பாரதீப்ம் பகுதிகளை தவிர மற்ற இடங்களில் 'டாப்ளர் வெதர் ரேடார்'கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் ரேடார் நிலைய வளாகத்திலேயே நவீன வசதிகளைக் கொண்ட 'டாப்ளர் வெதர் ரேடார் நிலையம்' ஒன்று அமைக்கப்பட்டது.

**ரூ.15 கோடி**

இந்நிலையத்தில் பொருத்துவதற்காக ரூ.15 கோடி மதிப்புள்ள அதிநவீன டாப்ளர் வெதர் ரேடார் கருவிகள் சீனாவிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளது. இவை சுமார் 15 முதல் 20 டன் வரை எடை உள்ளவை. ஏற்கனவே உள்ள ரேடார் கருவிகளை காட்டிலும் இந்த டாப்ளர் வெதர் ரேடார்கள் காரைக்காலை சுற்றியுள்ள சுமார் 150 கிலோ மீட்டர் தூரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நிலவும் தட்பவெப்பநிலை, காற்றின் வேகம், திசை, புயல் போன்றவற்றை கண்டுபிடிக்க முடியும். அதுமட்டுமின்றி சுமார் 400 கிமீ தூரம் வரையுள்ள பகுதிகளில் வானிலை மாற்றங்களையும் கண்டுபிடிக்க முடியும்.

**ஊழியர்கள் தேர்வு**

தமிழகத்தில் சென்னையிலும், புதுச்சேரியில் காரைக்காலிலும், ஆந்திராவில் 3 இடங்களிலும் டாப்ளர் வெதர் ரேடார் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காரைக்காலில் அமைக்கப்பட்டுள்ள இந்த ரேடார் நிலையத்திற்கு தேவையான அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்னர் அதாவது அக்டோபர் மாதம் செயல்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ரேடார் நிலையம் செயல்படத் தொடங்கியதும் காரைக்கால், சிதம்பரம், கடலூர், புதுச்சேரி, நாகை, தஞ்சை, புதுக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் கடல் மற்றும்

நிலப்பகுதிகளில் ஏற்படும் மாற்றங்கள், புயல், புயலின் தன்மை போன்றவை ஆராயப்பட்டு சென்னை மற்றும் புதுதில்லியில் உள்ள வானிலை ஆராய்ச்சி நிலைய தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சி காரணமாக தேங்காய் விலை உயர்வு**



**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சி காரணமாக சந்தைகளில் தேங்காய் விலை உயர்ந்துள்ளது.

<u>தேங்காய் விலை</u>

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டு காலமாக பருவமழை பொய்த்து விட்டது. இதனால் விவசாயம் பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் நத்தம், ஆத்தூர், வத்தலக்குண்டு, நிலக்கோட்டை ஆகிய பகுதிகளில் தென்னை சாகுபடி அதிக அளவில் செய்யப்படுகிறது.

இவற்றிற்கு கிணறுகள், ஆழ்துளை கிணறுகள் மூலம் தண்ணீர் பாய்ச்சப்பட்டு வந்தது. பருவமழை கைகொடுக்காததால் கிணறுகள், ஆறுகள், ஆழ்துளைக்கிணறுகள் வறண்டு போயின. மேலும் நிலத்தடி நீர் மட்டமும் அதல பாதாளத்திற்கு சென்றது. இதனால் தென்னை விவசாயம் முழுவதுமாக பாதிக்கப்பட்டுள்ளது.

<u>கிடு, கிடுவென உயர்வு</u>

இதனால் மாவட்டத்தின் ஏராளமான பகுதிகளில் தென்னை மரங்கள் நீரின்றி காய்ந்து விட்டன. மேலும் சாகுபடி பரப்பளவும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருவதால் காந்தி மார்க்கெட்டுக்கு தேங்காய் வரத்து குறைந்துள்ளது. வரத்து குறைவால் தேங்காய் விலை கிடு, கிடுவென உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு ஒரு தேங்காய் விலை ரூ. 8–ஆக இருந்தது. ஆனால் தற்போது 16 ரூபாய் முதல் 18 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. விளைச்சல் குறைந்துள்ளதால் தேங்காய் விலை அதிகரித்துள்ளது. வறட்சி இன்னும் நீடிப்பதால் தொடர்ந்து தேங்காய் விலை உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வைகை அணையின் நீர்மட்டம் 30 அடிக்கும் கீழே சென்றது**



**ஆண்டிப்பட்டி,**

வைகை அணையின் நீர்மட்டம் 30 அடியாக சரிந்துள்ள நிலையில் தற்போது இருப்பு இருக்கும் தண்ணீரை கொண்டு இன்னும் 40 நாட்களுக்கு மட்டுமே குடிநீர் வழங்க முடியும் என்பதால் மதுரையில் கடும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

<u>30 அடியானது</u>

தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி அருகே உள்ள வைகை அணை மதுரை மாவட்ட மக்களின் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்குகிறது. கடந்த 2 ஆண்டுகளாக போது

மான மழை பெய்யாததால் 71 அடி உயர வைகை அணை முழு கொள்ளளவை எட்ட வில்லை. தற்போது கோடை காலம் தொடங்கியுள்ள நிலையில் அணையின் நீர் மட்டம் நேற்று 30 அடியாக சரிந்தது. நீர் இருப்பை கருத் தில் கொண்டு மதுரை, சேடப் பட்டி கூட்டுக்குடிநீர் திட்டத் திற்கு வினாடிக்கு 60 கனஅடி வீதம் திறக்கப்பட்ட தண் ணீரின் அளவும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு 40 கன அடியாக குறைக்கப் பட்டது.

வைகை அணையில் தற்போது இருக்கும் தண்ணீர் மூலம் இன்னும் 40 நாட்களுக்கு மட்டுமே குடிநீர் வழங்க முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் அணையில் 15 முதல் 20 அடி வரை வண்டல் மண் படிந்து இருப்பதாக தெரிய வந் துள்ளது. இதனால் நீர்மட்டம் மேலும் குறையும் வாய்ப்பு உள்ளது. இதனால் மதுரை மாவட்டத்தில் இந்த ஆண்டு கடுமையான குடிநீர் பற்றாக் குறை ஏற்படும் அபாயம் உருவாகி இருக்கிறது.

<u>முல்லைப்பெரியாறு</u>

கடந்த 10 ஆண்டுகளில் வைகை அணையின் நீர் மட்டம் 21 அடியாக குறைந்த காலங்களில், முல்லைப் பெரி யாறு அணை யில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டு குடிநீர் வினியோகம் செய்யப் பட்டது. ஆனால் இந்த ஆண்டு முல்லைப்பெரியாறு அணையில் தண்ணீர் இருப்பு குறைவாக உள்ளதால் தண்ணீர் பற்றாக்குறையை தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முல்லைப் பெரியாறு அணையில் தற்போது 110.50 அடி தண்ணீர் உள்ளது. இதில் 108 அடிக்கு கீழே தண்ணீர் சென்றால் அணையில் இருந்து தண்ணீர் எடுக்க முடியாது.

தென்மேற்கு பருவமழை தொடங்க இன்னும் 3 மாதங் கள் உள்ள நிலையில் 40 நாட் களுக்கு மட்டுமே இருப்பு உள்ள தண்ணீரை கொண்டு மதுரை மாநகர மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வது எப்படி? என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தவித்து வருகின்றனர். தற்போது உள்ள சூழலில் கோடை மழை பெய்து வைகை ஆற்றில் நீர்வரத்து ஏற்பட்டாலும் வரும் வழியில் உள்ள நிலப்பகுதிகள் நீரை உறிஞ்சிய பிறகு அணைக்கு நீர்வந்து சேர பல நாட்கள் ஆகலாம்.

<u>நீர்மட்டம்</u>

நேற்றைய நிலவரப்படி வைகை அணையின் நீர்மட்டம் 30 அடியாக காணப்பட்டது. நீர்வரத்து இல்லாத நிலையில் மதுரை, சேடப்பட்டி கூட்டுக்குடிநீர் திட்டத்திற்காக அணையில் இருந்து வினாடிக்கு 40 கனஅடி தண்ணீர் திறக்கப் பட்டது. அணையின் மொத்த நீர் இருப்பு 368 மில்லியன் கன அடியாக உள்ளது. இதேபோல முல் லைப்பெரியாறு அணை யின் நீர்மட்டம் 110.50 அடி யாக இருக்கிறது. வினாடிக்கு 100 கனஅடி நீர்வரத்து உள்ளது. அணையில் இருந்து வினா டிக்கு 100 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மொத்த நீர் இருப்பு 991 மில்லி யன் கன அடியாக உள்ளது.

**சுட்டெரிக்கும் வெயில்: தர்ப்பூசணி, இளநீர், கம்பங்கஞ்சி, பழச்சாறு விற்பனை மும்முரம்**



**கோவில்பட்டி,**

சுட்டெரிக்கும் வெயிலால் பொதுமக்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். எனவே வெப்பத்தை தணிக்கும் வகையில் தர்ப்பூசணி, இளநீர், கம்பங்கஞ்சி கூழ், பழச்சாறு விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

<u>தர்ப்பூசணி பழங்கள்</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பகலில் கடும் வெயில் சுட்டெரிக்கிறது. இதனால் பொதுமக்கள் பகலில் வெளியே செல்லவே

பயப்படுகின்றனர். வெப்பத்தை தணிக்கும் வகையில் பொதுமக்கள் கம்பங்கஞ்சி கூழ், தர்ப்பூசணி, பழரசம், பழச்சாறு அருந்துகின்றனர். கோவில்பட்டி கடலையூர் ரோட்டில் ஏராளமான தர்ப்பூசணி பழங்கள் விற்பனைக்காக குவிக்கப்பட்டு உள்ளன.

இதுகுறித்து வியாபாரி கதிர்வேல் கூறுகையில், மதுரையில் இருந்து தர்ப்பூசணி பழங்களை கொள்முதல் செய்து வருகிறோம். 3 கிலோ முதல் 6 கிலோ வரையிலான தர்ப்பூசணி பழங்கள் உள்ளன. இவற்றை ஒரு கிலோ ரூ.15, ஒரு துண்டு ரூ.5 என்ற வீதத்தில் விற்பனை செய்கிறோம் என்றார்.

<u>இளநீர், கம்பங்கஞ்சி</u>

அதேபோல் கோவில்பட்டி– எட்டயபுரம் ரோட்டில் இளநீர் விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஒரு செவ்விளநீர் ரூ.30–க்கும், நாட்டு இளநீர் ரூ.20–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதேபோன்று பப்பாளி பழங்களும் சாலையோர கடைகளில் குவித்து வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ பப்பாளி பழம் ரூ.30–க்கும், ஒரு துண்டு ரூ.5–க்கும் விற்கப்படுகிறது. அவற்றை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி சாப்பிட்டனர். எலுமிச்சை, மாதுளை, பப்பாளி, தர்ப்பூசணி போன்ற பழங்களின் பழச்சாறுகளும், பழக்கடைகளில் அதிகளவில் விற்பனையாகிறது.

கோவில்பட்டி கடலையூர் ரோட்டில் 13 வகையான வடாகங்களுடன் கம்மங்கஞ்சி கூழ் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து வியாபாரி நாகராஜன் கூறுகையில், தமிழர்களின் பாரம்பரிய உணவான கம்பங்கஞ்சி கூழ் ஒரு கப் ரூ.10, பார்சல் (2 கப்) ரூ.20 என்ற வீதத்தில் விற்பனை செய்கிறோம். இதனுடன் சுண்ட வத்தல், புளி மிளகாய், உப்பு வத்தல், சீனி அவரைக்காய் வத்தல் போன்ற 13 வகையான வடாகங்களும் வழங்கப்படுகிறது என்று கூறினார்.